## பண்ணைக் காடுகள் கீழ் சாகுபடி செய்த சிறந்த விவசாயியின் விவரங்கள் மற்றும் சாகுபடிக் குறிப்புகள்

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், கல்லாக்கோட்டை கிராமத்தில் வசிப்பவர் திரு.ஏ.ராமலிங்கம் ஆவார். இவரிடம் உள்ள மொத்த நிலப்பரப்பு 8 ஏக்கர் ஆகும். அதில் 2015 – 16 ஆம் ஆண்டு நமது நிறுவனத்திடம் பண்ணைக்காடுகள் திட்டத்தின் கீழ் உயர் ரக சவுக்கு வீரிய குளோனல் ரக நாற்றுகளை பயிரிட்டார்.

அதனுடன் ஊடுபயிராக வேர்க்கடலை மற்றும் பாசிப்பயறு நடவு செய்து அதிக லாபத்தை ஈட்டி வனத்தோட்டத்துறை செய்தி மடலில் இடம் பெற்றுள்ளார். ஒரு ஏக்கருக்கான சாகுபடிக் குறிப்புகள் மற்றும் வரவு, செலவு மற்றும் நிகர இலாப விவரங்களை பிற விவசாயிகளின் நன்மைக்காக பகிரிந்துள்ளார்.

| **பயிர் விவரம்** | **சவுக்கு** | **வேர்க்கடலை** | **பச்சைப்பயிர்** |
|---|---|---|---|
| பயிரிடப்பட்ட காலம் | நவம்பர் 2015 | நவம்பர் 2015 | பிப்ரவரி 2016 |
| அறுவடை செய்த காலம் | ஜனவரி 2018 | பிப்ரவரி 2016 | ஏப்ரல் 2016 |
| மகசூல் விவரம் | 60 மெ.டன் | 1400 கிலோ | 300 கிலோ |
| சந்தை விலை | ரூ.5575/மெ.டன் | ரூ.54/கிலோ | ரூ.60/கிலோ |
| மொத்த லாபம் | 334500 | 75600 | 18000 |
| நிகர லாபம் | 215500 | 62900 | 14140 |
| **மூன்று வருடத்தில் லாபம்** | **292540** | | |




